# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ/ISOA/11/1–3, 09–02–2010 ஆம் நாளிட்டது
( ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம் )

2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின்படி (மத்தியச் சட்டம் 36/2003) 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறை விதிகள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் குறித்துரைக்கப்படுவதாலும் மற்றும் 2005 ஆகஸ்டு 3ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI –பிரிவு 2 (பின்னிணைப்பில் ) அது வெளியிடப்பட்டிருப்பதாலும்,

மற்றும் திறந்த நுழைவுரிமை கட்டத்தை திருத்துவதற்கு 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறை விதிகளைத் திருத்தம் செய்வது அவசியமெனக் கருதுவதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி மற்றும் முந்தைய வெளியீட்டிற்குப் பின்பு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் இதன் மூலம் 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறைவிதிகளில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்படுகிறது, அவையாவன :–

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :

    (i) இந்த ஒழுங்குமுறை விதிகள் 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை (திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள் என்று அழைக்கப்பெறும்.

    (ii) இவை, தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. 2005ஆம் ஆண்டு மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறை விதிகளின் 11ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம் :

2005ஆம் ஆண்டு மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறைவிதிகளின் 11ஆம் ஒழுங்குமுறைவிதியில், –

(i) (c) கூறில் “ மூன்றாவதாகவும் மற்றும் கடைசிக் கட்டத்தில் ” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ மூன்றாம் கட்டத்தில் ” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) (c) கூறுக்குப் பின்பு, பின்வரும் புதிய கூறு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

“(cc) நான்காம் மற்றும் கடைசிக் கட்டத்தில், உயர் மின் அழுத்த நுகர்வோர் அனைவருக்கும் சுமை அளவில் பாகுபாடு இன்றி, திறந்த நுழைரிமை அனுமதிக்கப்படுதல் வேண்டும்.”

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**(இரா. பாலசுப்பிரமணியன்)**
செயலாளர்